பிரசார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை-4

03 10 2026 SATURDAY 12 40 PM

ஆகாஷ்வாணி - செய்திகள்

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. வளர்ச்சியடைந்த இந்தியாவை உருவாக்க அனைவரும் ஒருங்கிணைந்து பாடுபட வேண்டும் என்று குடியரசு துணைத்தலைவர் திரு. சி.பி. ராதாகிருஷ்ணன் வலியுறுத்தியுள்ளார்.

2. போதைப்பொருள் ஒழிப்பில் மத்திய அரசு உறுதியுடன் உள்ளதாக உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா கூறியுள்ளார்.

3. வன உயிரினங்களின் பாதுகாப்பிற்கு கூடுதல் முக்கியத்துவம் அளிக்கப்பட்டுள்ளதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது.

4. ஜம்மு கஷ்மீரில் இதுவரை இல்லாத அளவிற்கு வளர்ச்சித் திட்டப் பணிகள் செயல்படுத்தப்பட்டு வருவதாக மத்திய அமைச்சர் திரு. கிஷன் ரெட்டி கூறியுள்ளார்.

5. ஆசிய விளையாட்டு போட்டிகளில் இந்தியா இன்று 2 தங்கம், ஒரு வெள்ளி, ஒரு வெண்கலப்பதக்கம் வென்றது.

>>>>>><<<<<<

வளர்ச்சியடைந்த இந்தியாவை உருவாக்க அனைவரும் ஒருங்கிணைந்து பாடுபட வேண்டும் என்று குடியரசு துணைத்தலைவர் திரு. சி.பி. ராதாகிருஷ்ணன் வலியுறுத்தியுள்ளார்.

இன்று புதுதில்லியில், பொருளாதார உச்சிமாநாட்டில் கலந்து கொண்டு அவர் பேசினார்.

எந்தவொரு சூழ்நிலையையும் எதிர்கொள்வதற்கு தேவையான வகையில் கொள்கைகள் வகுக்கப்பட வேண்டியதன் அவசியத்தை அவர் வலியுறுத்தினார்.

மக்களின் தேவைகளை அறிந்து, அதனை நிறைவேற்றும் வகையில் கொள்கைகள் வகுக்கப்படுவதோடு மட்டுமின்றி அவை, குறித்த காலத்திற்குள் நிறைவேற்றப்பட வேண்டும் என்றும் அவர் கூறினார்.

அனைத்து தரப்பினருக்கான வளர்ச்சியை உறுதி செய்யும் வகையில் திட்டங்கள் செயல்படுத்தப்பட வேண்டும் என்றும் திரு. சி.பி. ராதாகிருஷ்ணன் கேட்டுக் கொண்டார்.

>>>>>><<<<<<

போதைப்பொருள் ஒழிப்பில் மத்திய அரசு உறுதியுடன் உள்ளதாக உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா கூறியுள்ளார்.

சமூகவலைதளத்தில் இதனை தெரிவித்துள்ள அவர், 2029ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்திற்குள் போதைப்பொருள் கடத்தல் கும்பல் முற்றிலுமாக ஒழிக்கப்பட வேண்டும் என்ற நோக்கில் மத்திய அரசு செயல்பட்டு வருவதாக குறிப்பிட்டுள்ளார்.

துருக்கி சென்று பதுங்கியிருந்த, போதைப்பொருள் கடத்தலில் முக்கியப் புள்ளியான நவ்ப்ரீத் சிங், மத்திய அரசு மேற்கொண்ட நடவடிக்கைகள் காரணமாக அந்நாட்டிலிருந்து இந்தியாவிற்கு அழைத்து வரப்பட்டுள்ளதாக அமைச்சர் தெரிவித்துள்ளார்.

இந்தியாவிலிருந்து ஆப்கானிஸ்தானுக்கு போதைப்பொருள் கடத்தி வந்த நவ்ப்ரீத் சிங், துருக்கி நாட்டு குடியுரிமையுடன் போலியான அடையாள அட்டை கொண்ட பெயருடன் செயல்பட்டு வந்ததாகவும் அவர் அதில் குறிப்பிட்டுள்ளார்.

தற்போது அந்த நபர், இந்தியா அழைத்து வரப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டுள்ளதாக அமைச்சர் தெரிவித்துள்ளார்.

இதற்காக பணியாற்றிய சம்பந்தப்பட்ட அனைத்து தரப்பினருக்கும் பாராட்டுகளை தெரிவித்துக்கொள்வதாகவும் திரு. அமித் ஷா கூறியுள்ளார்.

>>>>>><<<<<<

வன உயிரினங்கள் பாதுகாப்பிற்கும் மத்திய அரசு கூடுதல் முக்கியத்துவம் அளித்துள்ளதாக சுற்றுச் சூழல் மற்றும் வனத்துறை அமைச்சர் திரு. புபேந்தர் யாதவ் கூறியுள்ளார்.

ஊடக நிறுவனத்திற்கு அளித்துள்ள பேட்டியில் இதனை தெரிவித்துள்ள அவர், கழுகுகள் பாதுகாப்பிற்காக மேற்கொள்ளப்பட்டு வரும் நடவடிக்கைகளை சுட்டிக்காட்டினார்.

சூழல் மண்டலத்தை பாதுகாப்பதில் கழுகுகள் முக்கியப் பங்கு வகிப்பதாகவும் திரு. புபேந்தர் யாதவ் தெரிவித்துள்ளார்.

>>>>>><<<<<<

ஜம்மு கஷ்மீரில் இதுவரை இல்லாத அளவிற்கு வளர்ச்சித் திட்டப் பணிகள் செயல்படுத்தப்பட்டு வருவதாக மத்திய அமைச்சர் திரு. கிஷன் ரெட்டி கூறியுள்ளார்.

சமூகவலைதளத்தில் இதனை தெரிவித்துள்ள அவர், அனந்தநாக் மாவட்டத்திற்கு உட்பட்ட பகுதியில் உள்ள இரண்டு சுரங்கங்கள் வெற்றிகரமாக ஏலத்தில் விடப்பட்டதை சுட்டிக்காட்டியுள்ளார்.

ஏல நடைமுறைகளில் வெளிப்படைத்தன்மை முழுமையாக கடைபிடிக்கப்பட்டு வருவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

இந்த சுரங்கங்கள் முழுமையாக ஏலம் விடப்பட்டது, ஜம்மு கஷ்மீரின் பொருளாதார வளர்ச்சிக்கு மேலும் உத்வேகம் அளிக்கும் என்றும் திரு. கிஷன் ரெட்டி கூறியுள்ளார்.

>>>>>><<<<<<

மொழிவாரி மாநிலங்கள் பிரிக்கப்பட்ட காலங்களில் தமிழகத்திற்கான உரிமைகளை போராடி பெற்றதில், விடுதலைப் போராட்ட வீரரும், தமிழறிருமான ம.பொ. சிவஞானம் முக்கியப் பங்கு வகித்ததாக மத்திய இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் கூறியுள்ளார்.

சமூகவலைதளத்தில் இதனை தெரிவித்துள்ள அவர், ம.பொ. சிவஞானத்தின் நினைவு தினம் இன்று அனுசரிக்கப்படுவதை சுட்டிக்காட்டியுள்ளார்.

பத்திரிகையாளராகவும், எழுத்தாளராகவும் அறியப்பட்ட அவர், மகாகவி பாரதியாரின் எழுத்துக்களால் ஈர்க்கப்பட்டு, எழுத்துப் பணிகளை செழுமைப்படுத்தியுள்ளதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

சிலப்பதிகாரத்தின் புகழை பரப்பியதால், சிலம்புச் செல்வர் என்று ம.பொ. சிவஞானம் போற்றப்படுவதாகவும் டாக்டர் எல். முருகன் கூறியுள்ளார்.

>>>>>><<<<<<

மக்கள் நலனே தேசத்தின் நலன் என்பதை தாரக மந்திரமாக கொண்டு செயல்பட்டு வரும் பிரதமர் திரு. நரேந்திர மோடி, 25 ஆண்டுகள் பொதுசேவையை நிறைவு செய்துள்ள நிலையில், அவரது தொலைநோக்குப் பார்வையின் கீழ், வளர்ச்சியடைந்த இந்தியாவை உருவாக்க வேண்டும் என்ற நோக்கில் மத்திய அரசு செயல்பட்டு வருகிறது.

குறிப்பாக, ஊரக பகுதியை சேர்ந்த மகளிரின் மேம்பாட்டில் மத்திய அரசு தனிக்கவனம் செலுத்தி வருகிறது.

வேளாண் துறையில் நவீன தொழில்நுட்பங்களை பயன்படுத்துவதற்கான பயிற்சியையும் மத்திய அரசு ஊரகப் பகுதி மகளிருக்கு வழங்கி வருகிறது.

இதுதொடர்பான சிறப்பு தொகுப்பில் இன்று இடம்பெறுகிறது, நமோ ட்ரோன் சகோதரிகள் திட்டம்

(வாய்ஸ் ஓவர் 100 SEC. )

*(வேளாண் துறையில் ட்ரோன் தொழில்நுட்பத்தை பயன்படுத்துவதற்கு ஊக்கமளிக்கும் வகையில் கடந்த 2023 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் மத்திய அமைச்சரவை இந்த திட்டத்திற்கு ஒப்புதல் அளித்தது.*

*1261 கோடி ரூபாய் செலவில் கடந்த 3 ஆண்டுகளாக இந்த திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.*

ஊரகப் பகுதிகளைச் சேர்ந்த மகளிரின் பொருளாதாரத்தை மேம்படுத்தும் வகையில் செயல்படுத்தப்பட்டுவரும் இந்த திட்டம் அவர்களின் வாழ்வில் பெரும் மாற்றத்தை கொண்டுவந்துள்ளது. விவசாயிகளுக்கு ட்ரோன் மூலம் உரம் பூச்சிக்கொல்லி மருந்துகளை தெளிப்பதற்கு உதவிடும் வகையில் இந்த திட்டம் உருவாக்கப்பட்டது. இதன் காரணமாக விவசாயிகளுக்கான செலவினங்கள் குறைவதோடு ட்ரோன்களை வாடகைக்கு விடுவதன் மூலம் அப்பகுதியை சேர்ந்த மகளிரும் பொருளாதார வளர்ச்சி கண்டுவருகின்றனர்.

இந்த திட்டத்தின்கீழ் ட்ரோன் வாங்குவதற்கான 80 சதவீத நிதியுதவியை மத்திய அரசு வழங்குகிறது.

இதற்கான உச்சவரம்பாக 8 லட்சம் ரூபாய் நிர்ணயிக்கப்பட்டு அதற்கான கடனுதவியும் வழங்கப்பட்டு வருகிறது.

இந்த திட்டத்தின்கீழ் ட்ரோன்களை பயன்படுத்துவதற்கான பயிற்சியும் வழங்கப்படுகிறது.

இந்த திட்டம் தனது வாழ்வில் பெரும் மாற்றத்தை ஏற்படுத்தியதாக ராஜஸ்தான் மாநிலத்தை சேர்ந்த பூஜா கூறுகிறார்.

இது தங்களது குடும்பத்தின் நிதி சுமையை களைவதற்கு உதவியதாகவும் அவர் தெரிவிக்கிறார்.

இந்த திட்டம் தொழில்நுட்பத்தை பயன்படுத்துவதற்கு ஊக்குவிப்பதோடு மட்டுமின்றி ஊரகப் பகுதிகளை சேர்ந்த மகளிரின் வாழ்வாதாரத்தையும், வருவாயையும் வெகுவாக உயர்த்தியுள்ளது என்றால் அது மிகையல்ல.)

>>>>>><<<<<<

தில்லியில் காற்று மாசுபடுவதை தடுக்க உறுதியான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக முதலமைச்சர் திருமதி. ரேகா குப்தா கூறியுள்ளார்.

தில்லியில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், தில்லி அரசு மேற்கொண்டு வரும் நடவடிக்கைகளுக்கு வரும் காலங்களில் உரிய பலன்கள் கிடைக்கும் என்றும் தெரிவித்தார்.

மக்கள் நலனுக்கு முக்கியத்துவம் அளித்து தில்லி அரசு கொள்கைகளை வகுத்து வருவதாகவும் திருமதி. ரேகா குப்தா கூறினார்.

>>>>>><<<<<<

செம்மொழி மராத்தி மையத்தை ஏற்படுத்துவதற்கு மத்திய அரசு ஒப்புதல் அளித்துள்ளதாக மஹாராஷ்ட்ர முதலமைச்சர் திரு. தேவேந்திர ஃபட்னவிஸ் கூறியுள்ளார்.

சமூகவலைதளத்தில் இதனை தெரிவித்துள்ள அவர், மாநில அரசின் கோரிக்கையை ஏற்று, புனேயில் உள்ள Deccan கல்லூரியில் இந்த மையத்தை ஏற்படுத்த மத்திய அரசு ஒப்புதல் அளித்துள்ளதாக குறிப்பிட்டுள்ளார்.

மஹாராஷ்ட்ர மக்களுக்கு மகிழ்ச்சியை ஏற்படுத்தும் வகையில் மத்திய அரசு இந்த ஒப்புதலை அளித்துள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

இதற்காக பிரதமர் திரு. நரேந்திர மோடிக்கு நன்றி தெரிவித்துக் கொள்வதாகவும் திரு. தேவேந்திர ஃபட்னவிஸ் கூறியுள்ளார்.

>>>>>><<<<<<

ஆந்திராவில் தனியார் நிறுவனத்தில் கொதிகலன் வெடித்து ஏற்பட்ட விபத்தில் 4 தொழிலாளர்கள் உயிரிழந்தனர்.

திருப்பதி மாவட்டத்திற்கு உட்பட்ட பகுதியில் செயல்பட்டு வந்த இந்த தனியார் தொழிற்சாலையில் இன்று காலை இந்த விபத்து நேரிட்டதாக அம்மாநில காவல்துறையினர் தெரிவித்தனர்.

>>>>>><<<<<<

ஆசிய விளையாட்டு போட்டிகளில் இந்தியா இன்று 2 தங்கம், ஒரு வெள்ளி, ஒரு வெண்கலப்பதக்கம் வென்றது.

ஜப்பானில் நடைபெற்று வரும் இப்போட்டியின் மகளிர் வில்வித்தைப் பிரிவில் Kumkum Mohod தங்கப்பதக்கம் வென்றார்.

மகளிர் Golf போட்டியில் Pranavi தங்கப்பதக்கம் வென்றார்.

இப்போட்டியின் மகளிர் குழுப் பிரிவில், இந்தியாவிற்கு வெள்ளிப்பதக்கம் கிடைத்தது.

வில்வித்தை போட்டியின் ஆடவர் பிரிவில் இந்தியாவின் Neeraj Chauhan வெண்கலப்பதக்கம் வென்றார்.

கிரிக்கெட் போட்டியில் இந்தியாவுக்கு எதிரான இறுதியாட்டத்தில் 212 ரன் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் பேட் செய்து வரும் பாகிஸ்தான் சற்றுமுன்வரை 10.3 ஓவரில் 3 விக்கெட் இழப்புக்கு 83 ரன் எடுத்துள்ளது.

இப்போட்டியில் முதலில் பேட் செய்த இந்தியா நிர்ணியக்கப்பட்ட 20 ஓவரில் 6 விக்கெட் இழப்புக்கு 211 ரன் எடுத்தது.

மல்யுத்த போட்டியின் மகளிர் 53 கிலோ எடைப்பிரிவில் Antim இறுதியாட்டத்திற்கு முன்னேறியுள்ளார்.

ஆடவர் 57 கிலோ எடைப்பிரிவில் Aman Sehrawat-ம் இறுதிச்சுற்றுக்கு தகுதி பெற்றுள்ளார்.

இப்போட்டிகளில் இந்தியா இதுவரை 18 தங்கம், 26 வெள்ளி, 36 வெண்கலப்பதக்கங்களுடன், பதக்கப்பட்டியலில் 5வது இடத்தில் உள்ளது.

>>>>>><<<<<<